**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 4534/ஆ4/ 2024 நாள். 25.01.2025**

**பொருள் :** தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்வு(TRUSTS), டிசம்பர் 2024 – 01.02.2025 (சனிக்கிழமை) அன்று நடைபெறுவதாக இருந்த தேர்வு நடைபெறுவதாகவிருந்த தேர்வு 08.02.2025 (சனிக்கிழமை) அன்று நடைபெறுதல் – விவரம் தெரிவித்தல் தொடர்பாக.

**பார்வை :** 1.அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.016971/ டி(4)/2024 நாள் . 02.01.2025
2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள்.02.01.2025
3. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.016971/ டி(4)/2024 நாள் . 25.01.2025

----

பார்வை 2-ல் காணும் இவ்வலுவலகக் கடிதத்தில் தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்வு (TRUST) 01.02.2025 (சனிக்கிழமை) அன்று நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டது. தற்போது பார்வை 3-ல் காணும் அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகளின் படி பாரத சாரணியர் இயக்கத்தின் வைரவிழா 28.01.2025 முதல் 03.02.2025 வரை மணப்பாறை திருச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ளதால் மாணாக்கர்களின் நலன் கருதி, TRUST தேர்வு 08.02.2025 (சனிக்கிழமை) அன்று நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தேர்வு தேதி மாற்றம் குறித்தான விவரத்தை விண்ணப்பித்த மாணாக்கர்கள் அறியும் வண்ணம், மாணாக்கர்களுக்கு தெரிவிக்குமாறு அனைத்து அரசு/ ஊரகப் பகுதி பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், புதிய தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளை 03.02.2025 முதல் சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்து அவர்தம் மாணாக்கர்களுக்கு வழங்க வேண்டுமெனவும், தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் புதிய பெயர்ப் பட்டியலை 03.02.2025 முதல் பதிவிறக்கம் செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

//ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,

- தேர்வு மைய பள்ளித்தலைமை ஆசிரியர்கள்,வே.மா.
- சார்ந்த உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்,வே.மா.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி) தகவலின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.
- வேலூர் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.